நபர்களை தேடி வருகிறார்கள்.

## மார்த்தாண்டம்

# கிறிஸ்தவ கல்லூரியில் விழா

## நாளை தொடங்குகிறது

குழித்துறை, பிப்.23- மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் 56-வது கல்லூரி விழாக்கள் நாளை (திங்கட்கிழமை) தொடங்கி 6 நாட்கள் நடக்கிறது. நாளை நடைபெறும் விளையாட்டு விழாவில் இணைப்பாளர் ஜினில் மோன் வரவேற்று பேசுகிறார். நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக உடற்கல்விதுறை இயக்குனர் துரை சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். 25-ந் தேதி நடைபெறும் மாணவர் கிறிஸ்தவ இயக்க விழாவில் அருட்பணியாளர் சாம் மாத்யூ சிறப்புரையாற்றுகிறார்.

26-ந் தேதி நடக்கும் கல்லூரி நாள் விழாவில் கல்லூரி தலைவர் பேராயர் ஏ.ஆர். செல்லையா தலைமை தாங்குகிறார். சென்னையில் உள்ள இந்திய அரசின் ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் வளர்ச்சி இன்ஸ்டிட்யூட் தலைவர் சொக்கலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகிறார். 27-ந் தேதி நடைபெறும் கலைவிழாவில் திரைப்பட நடிகர் ரமேஷ் கண்ணா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகிறார்.

28-ந் தேதி நடக்கும் பட்டமளிப்பு விழாவில் நெல்லை மனோன்மணியம் பல்கலைகழக தேர்வு கட்டுப்பாட்டாளர் சுருளியாண்டி மாணவ-மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி பேசுகிறார். 29-ந் தேதி மாணவர் பேரவை விழா நடைபெறும். இந்த 6 நாட்கள் நடக்கும் நிகழ்ச்சிகளிலும் கல்லூரி தாளாளர் ராஜதுரை, முதல்வர் பால்ராஜ், பொது அமைப்பாளர் ஜோஸ் பால் உள்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி ஆட்சி மன்ற குழு உறுப்பினர்கள் ஆலோசனைபடி விழா குழுவினர் செய்துள்ளனர்.